இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL)

## டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு பயிலுனர்களை இணைத்துக் கொள்ளல் – 2017 / 2018

தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் ஒலுவில் வளாகத்தில் நடாத்தப்படும் பின்வரும் கற்கைநெறியினை பயில விரும்பும் தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தொழில்சார் உளவளத்துணை டிப்ளோமா கற்கைநெறி
### (Professional Diploma in Counselling)

| | | |
|---|---|---|
| தேவைப்படும் தகைமைகள் | : | க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் சித்தியுடன் அடிப்படை உளவளத்துணைத் திறன்கள் |
| கற்கைநெறிக் காலம் | : | ஒன்றரை வருடங்கள் (பகுதிநேர வகுப்பறைக் கற்கை – ஒரு வருடம், வெளிக்களப் பயிற்சி - ஆறு மாதங்கள்) |
| கட்டணம் | : | ரூபா. 60,000.00 (இவை மூன்று தவணைக் கட்டணங்களில் செலுத்த முடியும்) |

### இதழியல் டிப்ளோமா கற்கைநெறி
### (Diploma in Journalism)

| | | |
|---|---|---|
| தேவைப்படும் தகைமைகள் | : | க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் **அல்லது** க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது தமிழ்மொழி, கணிதம் உட்பட ஐந்து திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி **அல்லது** க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது தமிழ்மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியுடன் இதழியல் துறையில் 03 வருடகாலம் அனுபவம் |
| கற்கைநெறிக் காலம் | : | ஒரு வருடம் (வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் மட்டும் நடை பெறும்) |
| கட்டணம் | : | ரூபா. 40,000.00 (இவை நான்கு தவணைக் கட்டணங்களில் செலுத்த முடியும்) |

| | | |
|---|---|---|
| மொழி மூலம் | : | தமிழ் |
| தெரிவு செய்யப்படும் முறை | : | கல்வித்தகைமை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் பயிலுனர்கள் தெரிவு செய்யப்படுவர் |
| விண்ணப்ப முடிவுத் திகதி | : | **16.04.2017** |

விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பத்தினை செயற்படுத்துவதற்கான கட்டணமாக **ரூபா. 300.00** அறவிடப்படும். இக்கட்டணத்தினை எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் பல்கலைக்கழக பற்றுச் சீட்டு (PIV) ஊடாக மாத்திரமே செலுத்த முடியும். விண்ணப்பப்படிவங்களையும் பற்றுச் சீட்டினையும் நேரடியாகவும் அல்லது பல்கலைக்கழக இணையத்தளமான www.seu.ac.lk இல் பதிவிறக்கம் செய்தும் பெற்றுக்கொள்ளலாம். கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டினை (PIV – University Copy) கழராதபடி விண்ணப்பப்படிவத்தில் ஒட்ட வேண்டும். அதற்கமைய முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை **16.04.2017** அன்று அல்லது அதற்கு முன்னர் உதவிப்பதிவாளர், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கற்கைநெறியின் பெயரைக்குறிப்பிட வேண்டும். பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு:** போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்தில் குறிப்பிட்ட கற்கைநெறி நடத்தப்பட மாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்க.

பதில் பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்
16.03.2017